திருப்பூர் வடக்கு சட்டமன்றப் பேரவைத் தொகுதி, கணக்கம்பாளையம் ஊராட்சிப் பகுதியில் 1972–லிருந்து தாய்-சேய் நல விடுதியாக உள்ள மருத்துவமனையை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தாய்–சேய் நல விடுதிகள்,* Sub–centres–ஐ *ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுகின்ற திட்டம் என்பது அரசினுடைய கொள்கையிலே இல்லை. தாங்கள் குறிப்பிடுகின்ற பகுதியிலே உரிய விதிகளைப் பூர்த்தி செய்வதாக இருந்தால், அங்கு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதற்குண்டான வாய்ப்புகளை வரும் காலத்திலே அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

107—

மலர் விற்பனைக் கூடம்

***35026—திரு. எ.பி. சக்திவேல்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் தெற்கு தொகுதியில் மலர் விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2019 ஜூலை 15]

புரட்சி தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப்பாதம் வணங்கி, இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியில் பொற்கால ஆட்சி நடத்தி, வரலாற்றுச் சாதனை படைத்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) சேலம் தெற்கு தொகுதியில் மலர் விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயப் பெருங்குடி மக்களின் துயர்களைத் துடைக்க விவசாயக் கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்து, அவர்களின் வாழ்வில் ஒளியேற்றிய இதய தெய்வம் அம்மா அவர்களைப் போற்றி பணிந்து வணங்குகிறேன். அம்மா அவர்களின் வழியில், தானும் ஒரு விவசாயி என்பதை மெய்ப்பிக்கும் வகையில், முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் பயிர்களுக்குத் தக்கவாறு வறட்சி நிவாரணத் தொகையினை வழங்கி விவசாயிகளின் வேதனையைத் தீர்த்தவர், விழிகளில் நிறைந்தவர், வெற்றித் திருமகனார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் தெற்கு தொகுதியைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களிலிருந்து எனது தொகுதியிலுள்ள பல இடங்களுக்கு விவசாயிகள் மலர்களைக் கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர். குறிப்பாக வ.உ.சி. மார்க்கெட் பகுதியிலுள்ள பூக்கடையில் டன் கணக்கில் மலர்கள் விற்பனையாகின்றன. இவை அனைத்தும் தனியார் கட்டடங்கள் உள்ள கடைகளிலும், சாலையோரக் கடைகளிலும் உள்ள விற்பனையாளர்களால் கொள்முதல் செய்யப்படுகின்றன. விவசாயிகள் தாங்கள் கொண்டு வரும் மலர்களை நேரடியாக பொதுமக்களிடம் விற்று இலாபத்தை ஈட்டுகின்ற வகையிலும், மாலைகள், மலர்ச்சரங்கள் கட்டி விற்கும் சிறு வியாபாரிகளால்,

பிரதான சாலையில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகவும், புதியதாக நவீன முறையில் கட்டப்படவுள்ள வ.உ.சி. அங்காடியிலோ அல்லது திருமணிமுத்தாற்றின் கரைப் பகுதிகளிலோ ஒரு மலர் அங்காடியை அமைத்துக் கொடுத்து விவசாயிகள், சில்லறை வியாபாரிகள் மற்றும் பொதுமக்களின் நலன் காக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் 57,985 மெட்ரிக் டன் மலர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இது விவசாயிகளின் சுய தேவை நீங்கலாக, விற்பனை உபரி 56,825 மெட்ரிக் டன்னாகும். இப்பகுதியில் பயிரிடப்படும் மலர்கள் சேலம் வ.உ.சி. மலர்ச் சந்தைக்கும் மற்றும் அருகிலுள்ள மாவட்டங்களான கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் உள்ள மலர்ச் சந்தைகளுக்கும் பெருமளவில் வியாபாரிகளால் எடுத்துச் செல்லப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதுதவிர, அண்டை மாநில மலர் சந்தைகளிலும், அதாவது, பெங்களூரு போன்ற நகரங்களிலும் வியாபாரிகளால் விற்பனை செய்யப்படுகின்றன. சேலம் மாவட்டத்தில் உற்பத்தியாகும் அனைத்து வகை மலர்களும் வியாபாரிகளால் அவ்வப்போது விற்பனை செய்யப்பட்டுவிடுவதால், சேலம் தெற்கு தொகுதியில் தனியாக மலர் விற்பனைக் கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்ற விவரத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக ஒரு மலர் விற்பனைக் கூடம் அமைக்க மீண்டும் ஒரு முறை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு*

2019 ஜூலை 15]

அமைச்சர் ஐயா அவர்கள் மேற்கண்ட குறைகளை நிவர்த்தி செய்யும் அளவிற்கு வருங்காலத்திலாவது, அங்கே ஒரு மலர் விற்பனைக் கூடம் அமைத்துத் தர வேண்டுமென்று மீண்டும் தங்கள் வாயிலாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகர மக்கள் தாங்கள் வசிக்கும் வீடுகளிலும், மொட்டை மாடி மற்றும் பால்கனி போன்ற பகுதிகளிலும் மலர்ச் செடிகளை வளர்த்து, பராமரித்து பயனடைவதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருவதால், நகரின் பல இடங்களில் Nursery gardens *உள்ளன. சேலம் மாநகரைச் சுற்றியுள்ள விவசாய நிலங்களில் மல்லிகை, முல்லை, மரிக்கொழுந்து, ரோஜா, அரளி, சாமந்தி, கோழிக்கொண்டை, கனகாம்பரம் உள்ளிட்ட பல்வேறு மலர்ச் செடிகள் பயிரிடப்படுகின்றன. மண்ணின் வளத்தை அறிந்து, மலர்ச் செடிகள் பயிரிட்டு, அதன்மூலம் விவசாயிகள் அதிக வருமானம் ஈட்டவும், பொதுமக்கள் மலர்ச் செடிகளை வளர்க்கும் எண்ணத்தை ஊக்குவிக்கவும், சேலம் மாநகரை பசுமை மாநகரமாக மாற்றும் வகையிலும், சேலம் தெற்கு தொகுதியில் ஒரு மலர் ஆராய்ச்சி மையம் அமைத்துத் தந்தால், அருகிலுள்ள சேர்வராயன்மலை, ஏற்காட்டில் ஆண்டுதோறும் அரசால் நடத்தப்பெறும் மலர் கண்காட்சிக்கு சாலப் பொருத்தமாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு இதனைக் கொண்டு சென்று, மலர் ஆராய்ச்சி மையமோ அல்லது கிளை நிலையமோ அமைத்துத் தர வேண்டுமென தங்கள் வாயிலாக பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படி, அவசியத்தின் அடிப்படையில் சேலம் தெற்கு தொகுதியில் மலர் விற்பனைக் கூடம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே மலர்களுக்கான ஓர் ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அருகிலுள்ள மாவட்டமான கோயம்புத்தூரிலே அனைத்து வகையான தாவரங்களுக்கும் மற்றும் அனைத்து வகையான விவசாயத்திற்கும் தேவையான ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. தேவையான அனைத்தையும் அங்கேயிருந்து பெற்றுக்கொள்ளலாம். தனியாக ஓர் ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது இல்லை. இருந்தாலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வுகள் மேற்கொண்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

108—

வீட்டுமனைப் பட்டா

***26453—திரு. பி. முருகன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, பீமாண்டபள்ளி ஊராட்சியிலுள்ள விவசாயிகளுக்கு வீட்டுமனைப் பட்டா மற்றும் நிலப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர் குல சாமி அம்மா அவர்களின் அருளாசியோடு, நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கைகளை இன்றைக்கு தாக்கல் செய்கிற, தாய்த் தமிழ்நாட்டின் சாமானிய முதல்வராக சாதனை சரித்திரம் படைத்து வருகிற பாசமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு வணக்கங்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.